International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20-3 July - September 2026

Published on 14, Jul - Sep 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# சஞ்சாரம் நாவலில் நாதஸ்வரக் கலை: பண்பாடும் கலைஞர்களின் வாழ்வியலும்

**நா. திஷா,** பகுதி நேர முனைவர்பட்ட ஆய்வாளர்
மதுரை சிவகாசி நாடர்கள் பயோனியர் மீனாட்சி பெண்கள் கல்லூரி
பூவந்தி, அழகப்பா பல்கலைக் கழக இணைப்பு பெற்ற கல்லூரி

**முனைவர் க. கோமதி**
உதவிப் பேராசிரியர், நெறியாளர், தமிழ் ஆய்வியல் துறை

**ஆய்வுச் சுருக்கம்**

சஞ்சாரம் நாவல், நாதஸ்வரக் கலை எதிர்கொள்ளும் வீழ்ச்சியையும், அதற்கான வாய்ப்புகள் குறைந்து வரும் நிலையையும் ஆழமாகப் பதிவு செய்கிறது. நாதஸ்வரக் கலைஞர்களின் வாழ்வியல், அவர்களின் கலை அர்ப்பணிப்பு மற்றும் நாதஸ்வரக் கலையின் பண்பாட்டு முக்கியத்துவத்தை இந்நாவல் வெளிப்படுத்துகிறது. தமிழர் பண்பாட்டில் நாதஸ்வரம் கோவில் விழாக்கள், திருமணங்கள் உள்ளிட்ட மங்கல நிகழ்வுகளில் இன்றியமையாத இசைக்கலையாகத் திகழ்கிறது.

இந்நாவலில் நாதஸ்வரக் கலைஞர்கள் தங்கள் கலையை வெறும் தொழிலாக அல்லாமல், தெய்வீகப் பணியாகக் கருதுகின்றனர் என்பதை ஆசிரியர் வலியுறுத்துகிறார். கடுமையான பயிற்சி, ஒழுக்கம் மற்றும் அர்ப்பணிப்பின் மூலம் இக்கலையை அவர்கள் பேணிப் பாதுகாத்து வருகின்றனர். இருப்பினும், சமூகத்தில் அவர்களுக்குரிய மரியாதையும் அங்கீகாரமும் போதிய அளவில் கிடைப்பதில்லை; பொருளாதார நிலையிலும் அவர்கள் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். மேலும், நவீன தொழில்நுட்ப வளர்ச்சியும் காலமாற்றமும் பாரம்பரியக் கலைகளைப் புறக்கணிக்கும் சூழலை உருவாக்கியுள்ளன என்பதை நாவல் சுட்டிக்காட்டுகிறது. இத்தகைய சூழலில் நாதஸ்வரக் கலையின் அடையாளத்தையும் தொடர்ச்சியையும் பாதுகாக்க கலைஞர்கள் மேற்கொள்ளும் போராட்டமே சஞ்சாரம் நாவலின் மையக் கருத்தாக அமைகிறது.

## Abstract

The novel Sancharam portrays the cultural significance of Nadaswaram and the socio-economic challenges faced by its artists. This study examines how the novel represents Nadaswaram not only as a traditional musical art but also as a symbol of Tamil cultural identity. It highlights the artists' dedication, their declining social recognition, and the impact of modernization on the survival of this heritage. The study concludes that Sancharam serves as a literary testimony to the struggle for preserving the dignity and continuity of the Nadaswaram tradition.

**Keywords:** Sancharam, Nadaswaram, Tamil culture, traditional arts, artists, modernization.

**முதன்மைச் சொற்கள்:** சஞ்சாரம், நாதஸ்வரம், தமிழர் பண்பாடு, நாதஸ்வரக் கலைஞர்கள், வாழ்வியல், பண்பாட்டு மரபு.

முன்னுரை

மனிதன் இந்த உலகத்தில் தோன்றிய காலம் தொட்டு அவனுடைய உணர்வுகளையும், சிந்தனைகளையும் இந்த உலகிற்கு வெளிபடுத்த பயன்பட்ட மிக சிறந்த வடிவமே கலை ஆகும். ஒரு மனிதனின் படைப்பாற்றல் என்பது அவன் பிறந்த னாளிலிருந்தே தொடங்குகின்றது. அந்த படைப்பாற்றலின் வாயிலாக கலை பிறக்கின்றது. கலை என்பது சாதாரணமான பொழுதுபோக்கு நிகழ்கவு அல்ல. ஒரு சமூகத்தின் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் பிரதிபலிக்கும் கால கண்ணாடி ஆகும். அழகு, திறமை, படைப்பு, நயம் இவை அனைத்தும் கலை என்ற சொல்லின் அடிப்படை பொருளாகும். மனிதன் தன் வாழ்க்கை அனுபவத்தின் வாயிலாக பிறக்கும் கற்பனைகளையும், உள்ளுணர்வுகளையும் வெளிப்படுத்தும் ஒரு அழகிய வடிவமே கலை ஆகும். இவற்றில்

- ஓவியம்
- இசை
- நடனம்
- நாடகம்
- சிற்பம்
- இலக்கியம்

மேற்கண்ட அனைத்தும் கலை வடிவங்களே. இக்கலைகளால் மிக பழமையும், இனிமையும் வாய்ந்த இசைக் கலை என்பது மனிதனை, ஆட்கொள்ளக் கூடிய கலை ஆகும். இசை மனித வாழ்க்கையில் ஒன்றிணைந்த ஒன்று.

**“பண் என்னாம் பாடற்கண்ணோக்கின்**
**பிறந்தார்**

**குணம் என்னும் குன்றுனிலை.**[1]

மேற்கண்ட குறள் இசையினுடைய இனிமையையும், மனிதனுடைய குண நலன்களையும் ஒன்றுபடுத்தி காட்டுகின்றது. மனித வாழ்வில் இசை ஒரு அங்கமாக திகழ்கின்றது. இத்தகு இசை, கலை உலகில் நாதஸ்வரம் முக்கிய பங்கு வகின்றது. எஸ். இராமகிருஷ்ணன் அவர்கள் தன்னுடைய நாவலான சஞ்சாரத்தில் நாதஸ்வர கலை குறித்தும் நாதஸ்வர கலைஞர்கள் குறித்தும் மிக தெளிவான கருத்துக்களை வழங்கியுள்ளார்.

இசை

இயற்கை தோன்றிய கனமே இசை தோன்றி இருக்ககூடும். காரணம் மலையில் இருந்து விழும் அருவியின் ஓசை, பறவைகளின் கீச் கீச் சத்தம், காற்றில் அசைந்தாடும் இலைகளின் சத்தம் இவை அனைத்தும் இயற்கை வழி உண்டான இனிமையான இசை ஆகும்.

**“இசையாவது நரம்படைவால் உரைக்கப்பட்ட பதினோராயிரத்து தொள்ளாயிரத்துத் தொண்ணுற்றோன்றகிய ஆதி இசைகள் எனச் சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர் கூறுவர். மூலாதாரம் தொடங்கிய எழுத்தோசை ஆளத்தியாய்ப் பின் இசையென்றும் பண்ணென்றும் பெயராம். பல இயற்பாக்களோடு இன்னோசையாகிய நிறத்தை இசைத்தலால் இசையென்று பெயராயிற்று பாவினோடு இயைத்துரைக்கப்பட்ட இசையினை நெஞ்சு, கண்டம். நா, மூக்கு அண்ணம், உதடு, பல், தலை என்னும் எட்டிடங்களிலும் எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு என்னும் எண்வகைத் தொழில்களால் உருவாகப் பண்ணிச் சீர்ப்படுத்திப் பாடம் பெறுவது பெயராம்”**[2] மேற்கண்டவாறு இசைகுறித்து ‘இசைத்தமிழ்’ நூலில் க.வெள்ளைவாரணனார் அவர்கள் எடுத்துரைத்துள்ளார். இசைகலையில் மிக முக்கியமான கலை நாதஸ்வர இசைக்கலை ஆகும்.

நாதஸ்வரம் பெயர் காரணம்

நாதஸ்வரம் இன்று சுபகாரியங்களுக்கும், திருவிழாக்கள், கச்சேரி போன்ற பல்வேறு இடங்களில் இசைக்கப்படுகின்றன. இன்றைய நவீன காலத்தில் இக்கலை அழிந்து வரும். கலைப்பட்டியலில் உள்ளது. ஒரு காலத்தில் நாதஸ்வரக் கலை என்பது உன்னதமான ஒரு கலையாக போற்றப்பட்டது. இந்த இசையினை இசைக்கும் இசைக்கருவியான நாதஸ்வரம்-நாதஸ்வரம் எனப் பெயர் பெற காரணம் பல உண்டு. அவற்றில் ஒன்றிரண்டு கீழ்வருமாறு காண்போம்.

**“தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த நாகூர், நாகப்பட்டினம் முதலிய இடங்களில் இருந்த நாகர் என்னும் தமிழனத்தைச் சேர்ந்தவர்களால் இக்கருவி உண்டாக்கப்பட்டது என்றும் அதனால் இதற்கு நாகசுரம் என்னும் பெயர் ஏற்பட்டதென்றும் கூறகிறார்கள்.**[3]

வேங்கடசாமி அவர்கள் நாகர் இன மக்கள் நாதஸ்வர கருவியை உருவாக்கியதால் இந்த

இசைக்கருவி நாகசுரம் என பெயர் பெற்ற தாக தன்னுடைய நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**“ஒரு காலத்தில் இவ்வாத்தியம் தென்னிந்தி யாவில் உள்ள நாகூர், நாகப்பட்டினம் முதகிய ஊர்களில் உள்ளவர்கள் நாகசர்பத் தைத் தெய்வமாகப் பூசித்த நாகர் என்னும் சாதியினரால் வாசிக்கப்பட்டு வந்தது. நாகத்தின் உருவத்தைப் போன்று நீண்டிருந்ததின் காரணமாக நாதசுவரம் என்னும் பெயர் ஏற்பட்டது. இதனுடைய இனிமையான நாதம் காரணமாக பிற் காலத்தில் இது நாதஸ்வரம் எனப்பட்டது,”**[4]

கோ.ஜெயந்தி ரவிகிருஷ்ணன் அவர்கள் நாகத்தின் உருவத்தினைப் போன்று இருப்பதால் இந்த இசைக்கருவிக்கு நாதசுரம் எனப் பெயர் வந்தது என்றும், இந்த இசைக்கருவியில் இருந்து வரும் இனிமை யான இசையின் காரணமாக பிற்காலத்தில் நாகசுரம் என்பது நாதஸ்வரம் என பெயர் மாற்றம் பெற்றதாக தன்னுடைய நூலில் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கண்ட சான்றுகள் மூலம் நாதஸ்வரம் குறித்த பெயர் காரணங்கள் புலப்படுகின்றது.

**நாதஸ்வர இசைக்கருவியின் பாகங்கள்**

நாதஸ்வர இசைக்கருவியை ஐந்து பாகங்க ளாக பிரிக்கப்பட்டு உள்ளது. அவைன் கீழ்வருமாறு.

“**அணசு:** இது நாதஸ்வரத்தின் கீழ் பகுதி. இது மரத்தினால் (அ) உலோகத்தினால் செய்யப்படும். வட்ட வடிவமாக விரிந்த அடிப்பகுதி.

**உடல் (அ) உளவு:** இது நாதஸ்வரத்தின் மேல் பகுதி. இது உள் கூடான நீண்ட வன்மரத்தினால் செய்யப்பட்ட குழல் போன்ற பகுதி.

**கெண்டை:** உடலின் மேல் பொருத்தப்படும் செப்புத் தகடால் செய்யப்பட்ட ஒரு பகுதி.

**சீவாளி:** இது ஒரு வகை நாணல் புல் வகையால் செய்யப்படுகிறது. இதன் மூலம் நாதஸ்வரத்தையும் இணைக்கும் பகுதி கெண்டை எனப்படும்.

**கெண்டை:** சீவாளியையும், நாதஸ்வரத்தையும் இணைக்கும் பகுதி கெண்டை எனப்படும்.”[5]

மேற்கணடவாறு அணசு, உடல்(அ) உளவு, கெண்டை, சீவாளி, கெண்டை என நாதஸ்வர இசைக்கருவியைன் பாகங்களை ஐந்தாக பிரித்து விளக்கி உள்ளார் கோ.ஜெயந்தி ரவிகிருஷ்ணன் அவர்கள்.

**நாதஸ்வர கலையின் சிறப்பு**

தமிழனின் பண்பாட்டிலும் வாழ்க்கை முறை யிலும் இசை என்பது மிக முக்கியமான ஒரு இடத்தை பிடித்துள்ளது. இத்தகு இசைக் கலையில் நாதஸ்வரம் இசை என்பது மிகவும் தனித்துவமானதாகவும், நுட்பம் வாய்ந்ததாகவும், இசை ஒலியாக மக்கள் மத்தியில் வலம் வருகின்றது. நாதஸ்வரம் வாசிப்பது எளிமையான காரியம் அல்ல. சிறந்த பயிற்சியும், கட்டுபாடும் அவசியம். இராகம், தாளம் பற்றிய அறிவு, மூச்சுக் கட்டுப்பாடு, விரல் நுட்பம் அவசியம். பல ஆண்டுகள் கடுமையான பயிற்சிக்கு பின்பு தான் திறமையான நாதஸ்வரக் கலைஞன் உருவாகின்றான்.

இசைக்கருவிகளில் காற்றுக் கருவியான நாதஸ்வரம் மிக பழமையான இசைக் கருவி ஆகும். தமிழ் நாட்டின் மரபு இசைக் கருவி யாக நாதஸ்வரம் திகழ்கின்றது. திருமணம், திருவிழா போன்ற சுப நிகழ்ச்சிகளில் நாதஸ்வர கருவி முக்கிய பங்கு வகுகின்றது. எஸ்.இராமகிருஷ்ணன் அவர்களின் சஞ்சாரம் நாவலில் நாதஸ்வர இசைக் கலையின் உயர்வு, அதன் ஆன்மீகத் தன்மை மற்றும் நாதஸ்வர இசை கலையின் நுணுக்கம் இவைகளை மிக நுணுக்கமாகவும் நயமாக வும் எடுத்துரைத்துள்ளார். நாதஸ்வரம் என்றாலே, கலை உலகில் தெய்வீகத் தன்மைகொண்ட ஒரு கலையாக பார்க்கப் படுகின்றது. நாதஸ்வர இசை சாதரன மனிதனுக்குள் இருக்கும் பக்தியை உணர்வு பூர்வமாக எடுத்துரைக்கின்றது.

**சஞ்சாரம் நாவலில் நாதஸ்வர கலையும், கலைஞரும்**

நவின கால தமிழ் இலக்கியங்களில் கலை களை பற்றியும், கலைஞர்களை பற்றியும் எடுத்துரைக்கும் பல படைப்புகள் உள்ளன. அந்த வகையில் நாதஸ்வரக் கலைஞர்களின் வாழ்க்கையைப் பற்றியும், கலையைப் பற்றியும் அழமாக எடுத்துரைக்கும் படைப்பு களில் முக்கியமான ஒன்றாக திகழ்கின்றது சஞ்சாரம் நாவல். சஞ்சாரம் நாவல் நாதஸ்வர இசை கலையை பற்றி மட்டும் விவரிக்கும் படைப்பு அல்ல. இந்த நாவல்

நாதஸ்வரக்கலையைப் பற்றியும், நாதஸ்வரக் கலையை வாழ்வாதாரமாகக் கொண்ட கலைஞர்களின் வாழ்க்கையை உணர்ச்சி பூர்வமாகவும், இயல்பாகவும் எடுத்துரைக் கின்றது.

தமிழரின் வாழ்க்கையில் நாதஸ்வரம் என்பது பாரம்பரிய இசைக்கருவிகளில் மிக முக்கிய மான ஒன்றாக திகழ்கின்றது. ஆன்மீக விழாக்கள், திருமண நிகழ்ச்சிகள், கோவில் திருவிழாக்கள், சமூக நிகழ்ச்சிகள் இது போன்ற நிகழ்ச்சிகளில் நாதஸ்வர இசைக் கருவிகள் பயன்படுத்தப் படுகின்றது. 'சஞ்சாரம்' நாவல் நாதஸ்வரக் கலையின் மகத்துவத்தையும், கலையின் பின்புலத்தை யும், கலைஞர்களுடைய போராட்டங்களையும் மிக நுட்பமாக வெளிப்படுத்துகின்றது. 'சஞ்சாரம்' நாவலில் இடம் பெறும் பக்கிரி, இரத்தினம் போன்ற கலைஞர்கள் உயர்ந்த கலை திறமை கொண்டவர்களாக நாவலில் இடம் பெற்றுள்ளனர். உயர்ந்த திறமை உடையவர்களாக இருந்தும் இந்த சமூகத்தில் அவர்கள் எதிர்கொள்ளும் இன்னல்களையும், பொருளாதார சிக்கல்களையும், கலைஞர் களை மதிக்காத மனப்பான்மை உடையவர் களாகவும் மிக வலுவாக சித்தரிக்கப் பட்டுள்ளனர்.

## முடிவுரை

'சஞ்சாரம்' நாவல் நாதஸ்வரக்கலை மற்றும் நாதஸ்வரக் கலைஞர்களின் வாழ்க்கையைக் குறித்து உணர்வுப்பூர்வமாக எடுத்துரைக்கின் றது. தஞ்சை பகுதியில் கொண்டாடப்படும் நாதஸ்வர கலை' கரிசல் வட்டாரப் பகுதியில் ஏன் கொண்டாடப்படுவதில்லை? என்ற அழுத்தத்துடன் படைப்பாளனின் ஆதங்கத்தில் உருவான கதை களம் தான் சஞ்சாரம் நாவல். இந்த நாவலில் ஏகப்பட்ட கதாபாத்திரங்கள் வந்து சென்றாலும் பக்கிரி, இரத்தினம் போன்ற கதாப்பாத்திரம் (நாதஸ்வர கலைஞர்) வாசகர்களின் மனதில் நீங்கா இடம் பிடித்து விட்டனர். நாதஸ்வரக்கலைஞர்கள் நட்சத்திரங் களாக திகழும் போது, அவர்களின் செயல் பாடுகளையும், அவர்கள் காலம் போகும் போக்கிலும், மனம் போகும் போக்கிலும் தங்களின் வாழ்க்கையை நகர்த்திச் செல்லும், எளிய வாழ்க்கை முறையினையும் கண்டு கொள்ளாமல் நடந்து செல்லும் நமக்கெல்லால் சஞ்சாரம் நாவல் ஒரு அறியாமை விழி திறக்கும் இயந்திரம் ஆகும்.

## மேற்கோள்கள்

1. திருவள்ளுவர். திருக்குறள். குறள் எண் 66.
2. வெள்ளைவாரணனார், க. இசைத்தமிழ். பக். 8.
3. வேங்கடசாமி, மயிலை சீனி. தமிழர் வளர்த்த அழகுக் கலைகள். பக். 83.
4. ஜெயந்தி ரவிகிருஷ்ணன், கோ. தமிழர் மரபு. பக். 2.61.
5. ஜெயந்தி ரவிகிருஷ்ணன், கோ. தமிழர் மரபு. பக். 2.62.

## துணைநூற் பட்டியல்

1. இராமகிருஷ்ணன், எஸ். *சஞ்சாரம்*. சென்னை: தேசாந்திரி பதிப்பகம்.
2. திருவள்ளுவர். *திருக்குறள்*. சென்னை: பூம்புகார் பதிப்பகம்.
3. வெள்ளைவாரணனார், க. *இசைத்தமிழ்*. சிதம்பரம்: ஸ்ரீ இராமகிருட்டின வித்தியாசாலை, 1979.
4. வேங்கடசாமி, மயிலை சீனி. *தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்*. சென்னை: நாம் தமிழர் பதிப்பகம்.
5. ஜெயந்தி ரவிகிருஷ்ணன், கோ. *தமிழர் மரபு*. சென்னை: ஸ்ரீ கிருஷ்ணா ஹைடெக் பப்ளிஷிங்.
6. தமிழண்ணல். *ஆய்வியல் அறிமுகம்*. மதுரை: மீனாட்சி புத்தக நிலையம்.
7. கைலாசபதி, கா. *இலக்கியமும் திறனாய்வும்*. சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
8. பரமசிவன், தொ. *பண்பாட்டு அசைவுகள்*. நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம்.
9. பக்தவச்சல பாரதி. *தமிழர் மானிடவியல்*. சென்னை: அடையாளம் பதிப்பகம்.
10. சண்முகசுந்தரம், சு. *நாட்டுப்புறவியல்*. சென்னை: காவ்யா பதிப்பகம்.
11. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் (தொ.ஆ.). *தமிழர் கலைகளும் பண்பாடும்*. சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
12. தமிழ்ப் பல்கலைக்கழகம் (தொ.ஆ.). *தமிழிசை ஆய்வுகள்*. தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.